# கற்றலில் குறைபாடு குழந்தைகளுக்கு 'ஆக்குபேஷனல் தெரபி' சிகிச்சை தீர்வு

## கே.எம்.சி.ஹெச்.,மருத்துவமனையில் தனித்துறை



சுஜாதா மிஸ்ஸல்

**கோவை, செப்.19:** கே.எம்.சி.ஹெச்.,மருத்துவமனை 'ஆக்குபேஷனல் தெரபி' துறைத்தலைவர் சுஜாதா மிஸ்ஸல் அளித்துள்ள பதில்கள் வருமாறு :

* கற்றலில் குறைபாடு என்றால் என்ன...

மனம் சார்ந்த ஒன்று அல்லது பல்வேறு இயக்கத்தில் ஏற்படும் குறைபாட்டால் 'கற்றலில் குறைபாடு' ஏற்படுகிறது. இத்தகைய குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு பாடத்தை கவனிப்பதிலும், பேசுவதிலும், எழுதுவதிலும், வாசிப்பதிலும், எழுத்துக்களை நினைவு கூர்வதிலும் சிரமம் ஏற்படுகிறது.

* இதற்கான அறிகுறிகள் முன்கூட்டியே தெரியுமா...

இத்தகைய பாதிப்பு உள்ள குழந்தைகள் ரொம்ப சேட்டை செய்வார்கள். சோம்பேறித்தனமாகவும், மன இறுக்கமாகவும் இருப்பார்கள். மிகவும் மெதுவாக குறைந்த வார்த்தைகளை மட்டும் மனப்பாடம் செய்வார்கள். மெதுவாக படிப்பது, எழுத்துக்களை மாற்றி கற்பிதம் செய்து கொள்வார்கள். கணக்கிலுள்ள கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், சமம் போன்ற குறிகளை குழப்பிக்கொள்வார்கள். அடிக்கடி கீழே விழுந்து விபத்திற்கு ஆளாவார்கள். பென்சில்களை முறையாக பிடிக்கமாட்டார்கள்.

* கற்றலின் குறைபாடு ஏற்பட காரணம் என்ன...

இது பரம்பரையாக வரக்கூடியது. இத்தகைய பாதிப்பு உள்ள குழந்தை உள்ள வீட்டில் பெற்றோருக்கோ, முன்னோர்களுக்கோ, நெருங்கிய உறவினர்களுக்கோ இத்தகைய பாதிப்பு இருந்திருக்க வாய்ப்புகள் அதிகம். பிரசவத்தின் போது தலைக்காயம், குறைப்பிரசவம், குறைந்த எடை, கருவில் உள்ளபோது ஆக்ஸிஜன் பற்றாக்குறை ஆகிய பாதிப்புகளால் கூட இது ஏற்படும்.

* 'ஆக்குபேஷனல் தெரபி' சிகிச்சை கற்றலின் குறைபாட்டை எப்படி போக்குகிறது...

ஆக்குபேஷனல் தெரபி சிகிச்சை அளிக்கும் மருத்துவர் கற்றலின் குறைபாடு உள்ள குழந்தைகளின் நடவடிக்கைகளை கணித்து, அந்த குழந்தைகளின் செயல்பாட்டை ஒருங்கமைக்கவும், திட்டமிடவும், உணரவும் பயிற்சி அளிப்பார்கள். மனமும், உடலும் ஒருங்கிணைந்து செயல்பட இயக்க நடவடிக்கை பயிற்சியும், பென்சில், க்ரையான்ஸ், புதிர் விளையாட்டு பொருட்களை கையாளவும், அழகான கையெழுத்து உருவாகவும் பயிற்சி பெறுவார்கள்.

இதன் மூலம் பயிற்சி பெறும் குழந்தைகள் ஒன்றை பார்த்து உணரவும், ஞாபக சக்தி பெறவும், ஒருமுகசிந்தனை அமையவும், வாசிப்பு, எழுதுதல், கணக்கீடு ஆகியவற்றில் திறன் வளரவும் முடியும். மேலும் மற்ற மாணவர்களை சுமூகமாக எதிர்கொள்ளவும், பழகவும், தனது வேலைகளை தானே செய்யவும், விளையாட்டு திறனும் பெறுவார்கள்.

கே.எம்.சி.ஹெச்.மருத்துவமனை 'ஆக்குபேஷனல் தெரபி' துறை குழந்தைகளின் கற்றலின் குறைபாடுகளை சரியாக கண்டறிவதற்கான சிறந்த பரிசோதனை முறைகளையும், பயிற்சிக்கான நவீன உள்கட்டமைப்பு வசதிகளையும் கொண்டுள்ளது. இதன் மூலம் ஏராளமான குழந்தைகள் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளனர்.

மேலும் விபரங்களுக்கு, ஆக்குபேஷனல் தெரபி துறைத்தலைவர் சுஜாதா மிஸ்ஸல், கே.எம்.சி.ஹெச்.மருத்துவமனை, அவினாசி ரோடு, கோவை. போன் : 0422-4323627. இ-மெயில் : *sujatamissal@kmchhospitals.com* ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.

-Advt